## ஏப்ரல் 28

**மனன வசனம்**

**தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், ... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். பிலிப்பியர் 2:9-11.**

**ஆராய்ச்சிக்கு**

*ரோமர் 8:3; யோவான் 1:29; வெளிப்படுத்தல் 5:12; எபிரெயர் 7:1-28; எபிரெயர் 9:11-15; லேவியராகமம் 16:13; எபிரெயர் 9:20-23.*

ஏப்ரல் 28 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 5

# பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் இயேசு



பரலோகப்பரிசுத்த ஸ்தலத்தில் இயேசு இருப்பது பற்றி, 'நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கி சேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்' என்று எபிரெயர் 6:20 கூறுகிறது.

பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் கிறிஸ்து நம் பிரதான ஆசாரியனாக ஊழியம்செய்கிறார் என்று புதிய ஏற்பாடு தெளிவுப்படுத்துகிறது. இப்பூமியில் நமக்காகப் பலியாக மாண்டு, உயிர்த்தெழுந்தபிறகு, இந்த ஊழியத்தைச் செய்துவருகிறார். எபி 10:12.

பரலோகப் பரிசுத்தஸ்தலத்தில் கிறிஸ்து செய்துவரும் ஊழியம்பற்றி இந்த வாரம் ஆராய்வோம். தேவபிள்ளைகள் கடைசிக்காலத்திற்காக ஆயத்தப்படுவதில் இயேசுவின் பரிந்துபேசுகிற ஊழியம் முக்கியப் பங்காற்றுகிறது. அதனால்தான் தேவன் இந்த முக்கிய அறிவுரையைத் தந்திருக்கிறார்: 'பரிசுத்த ஸ்தலம்பற்றியும், விசாரணைபற்றியும் தேவபிள்ளைகள் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். தங்கள் மகா பிரதான ஆசாரியரின் ஊழியம், பொறுப்புபற்றி ஒவ்வொருவரும் அறிந்திருக்கவேண்டியது அவசியம். இல்லையென்றால், இக்காலத்தில் காணப்படவேண்டிய விசுவாசத்தின்படி வாழ்வதும், தேவன் அவர்களுக்குத் திட்டமிட்டுள்ள பணியைச் செய்வதும் சாத்தியமில்லாமல் போய்விடும்' - *EGW, GC, p 488.*

பரலோகப்பரிசுத்த ஸ்தலத்தில் கிறிஸ்து நமக்காக என்ன செய்கிறார்? அதை நாம் புரிந்துகொள்வது, அதுவும் இந்தக் கடைசிநாட்களில் புரிந்துகொள்வது ஏன் முக்கியமானது?

*2018, மே 5 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, ஏப்ரல் 29

## மேலான பலி

விசுவாசிகள் தங்களை கடைசிக்காலத்திற்காக ஆயத்தப்படுத்துவதற்கு கிறிஸ்துவின் மேலான பலியை ஆராய்வது முக்கியமாகும். பொதுவாக மனிதர்கள் தங்களுக்கு முன்னால் இருக்கும் ஓர் இலக்கைநோக்கி ஓடுகிறார்கள். ஆனால், அந்த இலக்கு நமக்குப் பின்னாலும் இருக்கலாம். நான் கல்வாரியைப் பற்றிப் பேசுகிறேன். அதாவது, நமக்குரிய இலக்கை இயேசு ஏற்கனவே நமக்காக அடைந்துவிட்டார்; அது மாற்றமுடியாத ஒரு நிகழ்வாகிவிட்டது; எனவே, அடைந்துவிட்ட இலக்கைநோக்கியே நாம் ஓடுகிறோம்.

**தேவன் தம்முடைய குமாரனை நமக்காக இந்த உலகத்திற்கு அனுப்பியது ஏன்? ரோமர் 8:3; 1தீமோ 1:17; 6:16; 1கொரி 15:53.**

பாவத்தை மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி ஒரு பாவ பலியாக கிறிஸ்துவை தேவன் அனுப்பினார். இதன் பொருள் என்ன? தேவன் சாவாமை உள்ளவர்; அவர் சாகமுடியாது. எனவே, அவர் ஒரு மனிதனானார். நம்முடைய பதிலாளியாக மரிக்கும்படி சாகும்தன்மையை தம்மேல் ஏற்றார்.

இயேசு இயல்பிலேயே தேவனாக இருந்தாலும், 'மனுஷர் சாயலானார்;' அவர் தம்மைத் தாழ்த்தி, 'சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தார்.' பிலி 2:6-8. இயேசு சிலுவையில் மரித்தபோது அவருடைய தெய்வீகதன்மை மரிக்கவில்லை; அது எப்படியென்று தேவன்மாத்திரமே அறிவார். மனிதர்களுடைய அறிவுக்குஎட்டாதஒருவிதத்தில்இயேசுவின்தெய்வீகதன்மைஅவருக்குள்ளாக அடங்கியிருந்தது; அவர் கருவில் இருந்த ஒன்பது மாதங்களும், கல்லறையில் இருந்த நாட்களிலும் அது அவருக்குள் இருந்தது; இயேசு இங்கு மனிதனாக வாழ்ந்தபோதும், ஊழியம் செய்தபோதும், தம் சொந்த நலனுக்காக, தமது தேவ தன்மையை அவர் பயன்படுத்தவே இல்லை.

**கிறிஸ்துவுடைய மரணத்தின் நோக்கம்பற்றி லூக்கா 9:22 என்ன சொல்லுகிறது?**

மரிப்பதற்காகவே கிறிஸ்து பிறந்தார். நிந்தனையும், கசையடியும், கொடிய மரணமும் தமக்காகக் காத்திருந்ததை ஆரம்பம்முதல் அவர் நினைத்துப்பார்க்காமல்இருந்திருக்கவே முடியாது. இந்த அன்புக்குஇணையேது; இதுவரையிலும் காணப்படாத, முற்றிலும் புரிந்துகொள்ளமுடியாத அன்பு இது.

இப்படிப்பட்ட அன்பை எண்ணும்போது மனிதராகிய நாம் அவர் பாதத்தில் விழுந்து, விசுவாசத்தோடு தொழுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்? மனிதர்களின் புண்ணியங்கள் ஒன்றுக்கும் உதவாதவை என்பதை சிலுவை எவ்வாறு காட்டுகிறது?

## தேவ ஆட்டுக்குட்டி

**யோவான் 1:29; வெளி 5:12; 13:8 ஆகியவை சுட்டிக்காட்டப்படுகிற உருவகம் என்ன? இரட்சிப்பின் திட்டத்தை நாம் புரிந்துகொள்வதற்கு அந்த உருவகம் எவ்வளவு முக்கிய பங்கு வகுக்கிறது?**

இயேசுவை யோவான் ஸ்நானன், **'தேவ ஆட்டுக்குட்டி'** என்றார்; அவர் நேரடியாகவே ஆசரிப்புக்கூடாரத்தைச் சுட்டிக்காட்டுகிறார். இயேசு மரித்த பிறகு, பாவத்திற்காக இனி ஆட்டுக்குட்டிகளோ பிற மிருகங்களோ பலியாக வேண்டியதில்லை. இந்த உண்மையைத்தான், யோவான் ஸ்நானன் சுட்டிக்காட்டினார். நான்கு நற்செய்திப் புத்தகங்களிலும் பல்வேறு போதனைகள் உள்ளன; ஆனால், உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்கிற தேவஆட்டுக்குட்டியாக அவர் நிறைவேற்றியதைத்தான் அவை வலியுறுத்துகின்றன.

நம் இரட்சிப்புக்காக அவர் மரித்தார்; உயிர்த்தெழுந்தார். ஆனால், அவர் வேலை அவற்றோடு முடிந்துவிடவில்லை.

அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியாக அவர் தம் பங்கை நிறைவேற்றிய பிறகு, பரலோகப் பரிசுத்த ஸ்தலத் தில் அவர் பிரதான ஆசாரியனாக ஊழியம் செய்துவருவதை எபிரெயர் புத்தகம் சொல்கிறது. சிலுவைக்குப்பின் அவர் இந்த ஊழியத்தைச் செய்வதாக முதன்முதலாகச் சொல்லும் வசனம் எபிரெயர் 1:3. அதற்கு பிறகான அதிகாரங்களிலும் பிரதான ஆசாரியனாகவே இயேசு குறிப்பிடப்படுகிறார். பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் அவர் செய்யும் இந்த ஊழியம் பற்றி எபி 7:1-28 விரிவாகச் சொல்கிறது.

**எபிரெயர் 7:1–28இல், இயேசுவைப்பற்றி பவுல் சொல்வது என்ன?**

மிக அர்த்தமுள்ள வசனங்கள் இவை. ஆரோனின் வம்சத்தில் பிறந்து, பூலோக ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியம்செய்த ஆசாரியர்களைவிட, கிறிஸ்து மேலான ஆசாரியத்துவம் உள்ளவராக இருக்கிறார். பூலோக ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியம்செய்த பூலோக ஆசாரியர்களுக்குப் பதிலாக, இப்போது பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் நமக்காக ஊழியம்செய்யும் பரலோகப் பிரதான ஆசாரியர் ஒருவர் இருக்கிறார். எனவே, இயேசுவை நாம் நோக்கிப்பார்க்கும்போது, பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் நம் பிரதான ஆசாரியராக அவர் ஊழியம்செய்வதை நாம் நினைக்கவேண்டும்.

செவ்வாய், மே 1

# நம்முடைய பிரதான ஆசாரியன்

**எபிரெயர் 7:24–27; 8:6 வசனங்கள் தரும் மாபெரும் நம்பிக்கை என்ன?**

மற்ற ஆசாரியருக்கு இல்லாத பல்வேறு தகுதிகள் கிறிஸ்துவுக்கு இருப்பதால் நம்மை முற்றிலும் இரட்சிக்க அவர் வல்லவர். அவர் தேவன், நம் பாவங்களை மன்னிக்கிற அதிகாரம் அவருக்கு இருக்கிறது. அவர் நித்திய ஆசாரியத்துவத்தைப் பெற்றவர். இப்பூமியில் இருந்தபோது, வியாதியஸ்தர்களைக் குணமாக்கி, தனிமையில் இருந்தவர்களைத் தேற்றினார்; அதுபோலவே அதே மனதுருக்கத்துடன் தம் மக்களுக்காக எல்லா வேளையிலும் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். அவர் மனிதனுமாக உள்ளார்; ஆனால், பாவமற்றவராகப் பிறந்தார்; பாவமற்றவராகவே இருந்தார். மனிதர் அனைவருடைய பாவப் பாரத்தையும் சுமந்தவராக அவர் மரித்தார். தேவனும்-மனிதனுமாகிய அவர் மட்டுமே, பாவிகளுக்காக பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் பரிந்துபேசமுடியும்.

கிறிஸ்துவின் பலியே இறுதியானதென இந்த வசனங்கள் காட்டுகின்றன. ஒரே முறை இந்தப் பலி நிகழ வேண்டியிருந்தது; ஒவ்வொரு மனிதனுக்கும் இரட்சிப்பை அருள, அது போதுமானதாக இருந்தது. சிலுவையில் மரித்தது யாரென்று தெரிந்தால்தான், ஒவ்வொரு மனிதனும் இரட்சிக்கப்படுவதற்கு அதை விட மேலான ஒரு பலி இருக்கமுடியாதென்பது புரியும்.

**கிறிஸ்து தம் மரணத்தின்மூலமாகவும், பரலோகத்தில் இப்போது செய்யும் ஊழியத்தின்மூலமாகவும் நமக்கு எதைச் சம்பாதித்துத் தந்திருப்பதாக எபிரெயர் 9:11–15 கூறுகின்றது?**

கிறிஸ்து ‘நித்திய மீட்பை’ பெற்றுத் தந்ததாக எபி 9:12 கூறுகிறது. மீட்பு என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைக்கு **‘பிணையமீட்பு’ ‘விடுதலை’** என்றும் அர்த்தம் கூறலாம். லூக்கா 1:68 இல், தேவன் ‘தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டார்’ என்று சகரியா சொல்லும்போது இதே வார்த்தையைத்தான் பயன்படுத்துகிறார். கிறிஸ்து இரத்தம் சிந்துவதே ஒரே வழியாக இருந்தது; எனவே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துதாம் இந்த விடுதலையைப் பெற்றுத் தந்தார். சுவிசேஷம் சொல்லும் நற்செய்தி தெரியுமா? தமக்காக அல்ல, நமக்காக அவர் பலியானார்; கிறிஸ்துவின் பலியை ஏற்றுக்கொள்கிற யாவரும் இதன் பயனைப் பெற்றுக்கொள்ளலாம்.

கிறிஸ்து ‘நித்திய மீட்பை’ நமக்குப் பெற்றுத்தந்தார்; அதன்பிறகுதான் நமக்காக பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்கிறார். கிறிஸ்து நமக்காக பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் செய்துவரும் ஊழியம்குறித்து, நாம் எவ்வளவு நம்பிக்கையுடையவர்களாக வாழமுடியும்?

## நமக்காகப் பரிந்துபேசுகிறவர்

பாவமானது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே மிகப்பெரிய பிளவை உண்டுபண்ணியது; கிறிஸ்து நமக்காகப் பலியானதால், மனிதர்களாகிய நாம் தேவனோடு ஒப்புரவாகவும், தொடர்ந்து அவரண்டை செல்லவும் சிலாக்கியம் கிடைத்துள்ளது. எபே 2:18; 1பேதுரு 3:18.

*'அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூர மாயிருக்கிறது. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.' எபி 6:19,20.*

**இயேசு நமக்காக என்ன செய்திருப்பதாக இந்த வசனங்கள் கூறுகின்றன?**

**கிறிஸ்துவின் ஊழியத்தில் நடைபெறும் வேறு என்ன நிகழ்வுபற்றி எபி 9:24 கூறுகிறது?**

இயேசு நமக்கு முன்னோடியாக, நம்முடைய பிரதிநிதியாக பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து, பிதாவின் பிரசன்னத்திற்கு நமக்காகச் சென்றுவிட்டார். அதாவது, தாம் பலியாகிப் பெற்ற புண்ணியங்களால் நமக்கு 'நித்திய மீட்பை உண்டுபண்ணினதைச்' சொல்லி, பிதாவின்முன்பு நின்று ஊழியம் செய்துகொண்டிருக்கிறார்.

ஆம், நாம் இயேசுவை ஏற்றுக்கொண்டதும் நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன; தேவனுக்குமுன் மன்னிப்பைப் பெற்றவர்களாக, சுத்திகரிக்கப்பட்டவர்களாக நிற்கிறோம். நாம் மெய்யான கிறிஸ்தவர்களாக மாறியிருந்தாலும், பாவத்தை ஜெயங்கொள்வதற்கான அற்புத வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் சில சமயங்களில் நாம் பாவம் செய்துவிடுகிறோம் என்பதும் உண்மைதான். அச்சமயங்களில், இயேசு நம் பிரதான ஆசாரியராக பரலோகத்தில் பரிந்துபேசுகிறார். மனந்திருந்துகிற பாவியின் பிரதிநிதியாக அவர் நின்று, நம்முடைய புண்ணியங்களைச் சொல்லி அல்ல, தம்முடைய சொந்தப் புண்ணியங்களைச் சொல்லி, பிதாவுக்குமுன் வேண்டிக்கொள்கிறார். 'தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடு இருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்கவல்லவராயும் இருக்கிறார்.' எபி 7:25.

கிறிஸ்துவின் கிருபையும் இரக்கமும் தொடர்ந்து தங்களுக்குத் தேவைப்படுகிறது என்பதை உணராத கிறிஸ்தவர்கள் யாராவது இருக்கமுடியுமா? அதாவது, இயேசுவுக்குள் புதிய வாழ்வு கிடைத்தாலும், நம் வாழ்க்கையில் அற்புத மாற்றங்கள் உண்டானாலும், தேவனுடைய மன்னிப்பும், இரக்கமும் தொடர்ந்து தேவைப்படுகின்றன. இதை உணராதவர் யார்தான் இருக்கமுடியும்? அப்படியானால், கிறிஸ்து நம்முடைய பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்பதை அறிந்திருப்பது எவ்வாறு விலையேறப்பெற்ற ஒரு சத்தியம்?

**வியாழன், மே 3**

## பாவநிவாரண நாள்

கிறிஸ்து நமக்கான பிரதான ஆசாரியனாக ஊழியத்தை ஆரம்பித்திருக்கும் பரலோகப் பரிசுத்த ஸ்தலமானது பூலோக ஆசரிப்புக் கூடாரத்திற்கு ஒரு மாதிரியாக இருந்ததாக எபிரெயர் கூறுகிறது. பூலோக ஆசரிப்புக்கூடாரத்தின் இரண்டு அறைகளிலும் நடைபெற்ற ஆராதனைமுறைகளும், பலி மற்றும் சுத்திகரிப்புச் சடங்குகளும் ‘பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணுகையில் மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்.’ எபி 8:5.

பூலோக ஆசரிப்புக்கூடாரச் சடங்காச்சாரத்தில் பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்தஸ்தலம் ஆகிய இரு அறைகளிலும் ஊழியம்செய்யப்பட்டது; இதே போன்றுதான் பரலோகப் பரிசுத்தஸ்தலத்தில் கிறிஸ்துவினுடைய ஊழியமும் இருக்கிறது. பாவநிவாரண நாள் பூலோக ஆசரிப்புக்கூடாரத்தில், நியாயத்தீர்ப்பு நாளைச் சுட்டிக் காட்டியது; அன்று பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட்டது. லேவி 16. வருடத்தில் அந்த ஒரு நாள்மட்டும் பிரதான ஆசாரியன் மகா பரிசுத்தஸ்தலம் சென்று, பாவ நிவாரண ஊழியத்தைச் செய்வார். லேவி 16:12-14.

**எபிரெயர் 9:20–23இன்படி, எது சுத்திகரிக்கப்பட வேண்டியிருந்தது? கிறிஸ்துவினுடைய பாவ நிவாரண நாள் ஊழியத்தை இது எவ்வாறு காட்டுகிறது?**

பரலோகப் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படவேண்டியது அவசியமாக இருந்தது என்பதை வாசித்து, வேத அறிஞர்கள் குழம்பினார்கள். ஆனால், பாவநிவாரண நாளை அது சுட்டிக்காட்டுகிறது என்று புரிந்து கொண்டபோது குழப்பம் நீங்கியது. பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் கிறிஸ்து செய்துவருவதாக எபி 9:23 சுட்டிக்காட்டும் ஊழியத்தைத்தான், ஆசரிப்புக்கூடாரத்தில் வருடத்திற்கு ஒரு முறை வரும் பாவ நிவாரண நாளில் பிரதான ஆசாரியன் செய்த ஊழியம் எடுத்துக்காட்டியது. பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தை ஒரு நாள் கிறிஸ்து சுத்திகரிக்க இருந்தார்; அதற்கு பூலோக ஆசரிப்புக் கூடாரத்தின் சுத்திகரிப்பு அடையாளமாக இருந்தது. கிறிஸ்து பரலோகம் சென்றதுமே பரலோகப் பரிசுத்த ஸ்தலச் சுத்திகரிப்பு துவங்கியதாக இந்த வசனம் சொல்லவில்லை. இந்த ஊழியம் 1844ம் வருடம் துவங்கியதை தானியேல் புத்தகத்திலிருந்து அறியமுடிகிறது. எவ்வளவு முக்கியமான ஒரு காலக்கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணரவேண்டும்; ஆனாலும், கிறிஸ்து நமக்காக ஏற்கனவே நிறைவேற்றியிருப்பதையும், இப்போது பரலோக மகா பரிசுத்த ஸ்தலத்தில் நமக்காகச் செய்துகொண்டிருப்பதையும் நினைத்து, நிச்சயமுள்ளவர்களாக வாழவேண்டும்.

‘தேவனுக்குப்பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது’ என்று முதலாம் தூதனுடைய தூது சொல்கிறது. வெளி 14:7. நியாயத்தீர்ப்பு நிச்சயம் உண்டென்பதால், முடிவு நெருங்கிவிட்டதை உணரமுடிகிறது. நாம் வாழ்கிற விதத்தில் இந்த உண்மை எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்கவேண்டும்?

வெள்ளி, மே 4

## மேலும் படிக்க:

பூமியில் இயேசு நமக்காகப் பலியாகவிருந்ததையும், பரலோகத்தில் நம் பிரதான ஆசாரியனாக ஊழியம் செய்யவிருந்ததையும் பூலோக ஆசரிப்புக்கூடாரம் சுட்டிக்காட்டியதாக எபிரெயர் புத்தகம் கூறுகிறது. நற்செய்தியின் விளக்கப்பாட மாகவே ஆசரிப்புக்கூடாரம் இருந்தது. பலி, பரிந்துபேசுதல், நியாயத்தீர்ப்பு, பாவத்தின் இறுதிமுடிவு யாவும் உள்ளடங்கிய இரட்சிப்பின் திட்டத்தை அதிலிருந்து யூதர்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் கிறிஸ்து செய்துவரும் இறுதிக்கட்ட பணியானது கடைசிக் காலத்திற்குரியது என்பதைப் புரிந்துகொள்ள தானியேல்புத்தகம் உதவுகிறது. 'சுத்திகரிப்பையும், விசாரணை யையும், நீதிமானாகத் தீர்க்கப்படுவதையும் வலியுறுத்தும் தானியேலின் கடைசிக் காலத் தீர்க்கதரிசனங்கள் பாவ நிவாரண நாளை உலக வரலாற்றின் இறுதிமட்டும் காட்டிக்கொண்டே இருக்கின்றன. பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் சுத்திகரிப்பு நடக் கிறது; அங்கு மேசியா ராஜாவாகவும் ஆசாரியராகவும் செயல்படுகிறார். இந்தத் தரிசனங்கள் ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தைச் சுட்டிக்காட்டுகின்றன; அதன்மூலம், தேவனுடைய பரிசுத்த வாசஸ்தலத்தில் இறுதிச்சுத்திகரிப்பையும், விசாரணையையும், நீதிமானென்று தீர்ப்புவழங்குவதையும் மேசியா எப்போது துவங்குவார் என்பதைக் கணிக்க முடிகிறது.' - *Handbook of Seventh-day Adventist Theology, p 94.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *பின்வரும் எலன் ஒய்ட்டின் மேற்கோளை வாசியுங்கள்: "முற்கால இஸ்ரவேலில், மக்கள் விசுவாசத்தோடு பாவங்களை அறிக்கையிட்டபோது, அப்பாவங்கள் பாவ நிவாரண பலியின்மீது வைக்கப்பட்டன. அப்பலியின் இரத்தம் பூலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் தெளிக்கப்பட்டது, அவை அங்கு மாற்றப்பட்டதற்கு அடையாளமாய் இருந்தது; அதுபோல புதிய உடன்படிக்கையில், மனந்திருந்தி விசுவாசத்தோடு அறிக்கையிடுகிறவர்களின் பாவங்கள் கிறிஸ்துவின்மீது வைக்கப்பட்டு, மெய் யாகவே பரலோகப் பரிசுத்தஸ்தலத்திற்குள் மாற்றப்படுகின்றன. பூலோகப் பரிசுத்தஸ்தலத்திற்குள் மாற்றப்பட்டிருந்த பாவங்கள் சுத்திகரிப்புநாளில் அங்கிருந்து அகற்றப்பட்டன. அதுபோல பரலோகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பாவங்கள் பரலோகப் பரிசுத்தஸ்தல சுத்திகரிப்பின்மூலம் அங்கிருந்து முற்றிலும் அகற்றப்படுகின்றன. ஆனால் இதைச் செய்வதற்குமுன், யாரெல்லாம் பாவத்தி லிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் விசுவாசம்வைத்ததன்மூலம் பாவ நிவாரணத்தின் பலன்களைப் பெறத் தகுதிபெற்றுள்ளார்களென்று புத்தகப்பதிவு களை ஆராய்ந்து பார்த்தாகவேண்டும்' - GC, p 421,422. இயேசுவின் பாவநிவாரண பலன்களைப் பெறுவதற்கு எலன் ஒய்ட் கூறும் இரண்டு தகுதிகள் என்ன? கடைசி நாட்களில், நியாயவிசாரணை நடந்துவரும் நிலையில் இந்த இரண்டு விஷயங் களையும் தேவபிள்ளைகள் மனதில் வைத்திருப்பது ஏன் முக்கியமானது?*

2. *இரத்தத்தின் முக்கியத்துவம் என்ன? லேவி 16:15,16. இரத்தம் எதைச் சுட்டிக்காட்டி யது? பாவநிவாரண நாளின் சடங்கில் இரத்தம் எவ்வாறு முக்கியப் பங்காற்றியது? கிறிஸ்துவின் இரத்தம் இன்று நமக்கு எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*